முகடு $$= L+\left(\frac{\Delta_1}{\Delta_1+\Delta_2}\right)\times C$$

L = முன் மாதிரி வகுப்பின் கீழ்வரம்பு = 20

Δ_1 = முன்மாதிரி வகுப்பின் (f_1) நிகழ்வெண்ணிற்கும் முன்வரும் முன்மாதிரி வகுப்பின் (f_0)நிகழ்வெண்ணிற்கும் இடைப்பட்ட வேறுபாடு $\Delta_1 = f_1 - f_0$

Δ_2 = முன்மாதிரி (f_1) நிகழ்வெண்ணிற்கும் பின்வரும் (Succeeding) முன்மாதிரி வகுப்பின் (f_2) நிகழ்வெண்ணிற்கும் இடைப்பட்ட வேறுபாடு $\Delta_2 = f_1 - f_2$

C = முன்மாதிரி வகுப்பின் வகுப்பு இடையீடு = 10

f_1 = முன்மாதிரி வகுப்பின் நிகழ்வெண் = 12

f_0 = முன்வரும் முன் மாதிரி வகுப்பின் நிகழ்வெண் = 6

f_2 = பின்வரும் முன்மாதிரி வகுப்பின் நிகழ்வெண் = 8

	எடை (கிராம்களில்)	எண்ணிக்கை
	0-10	4 f_0
முன்வரும் வகுப்பு →	10-20	6 $f_1 \rightarrow f_0$
முன்மாதிரி வகுப்பு →	20-30	12 $f_2 \rightarrow f_1$
பின்வரும் வகுப்பு →	30-40	8 $\rightarrow f_2$
	40-50	2
	50-60	4

முகடு $=20+\left(\frac{12-6}{12-6+12.8}\right)\times 10$

$$=20+\left(\frac{6}{6+4}\right)\times 10$$

$$=20+\left(\frac{6}{10}\right)\times 10$$

$$=20+(0.6\times 10)$$

விடை முகடு = 26 கிராம்

Problems : 1

கீழக்கண்ட தரவுகளிலிருந்து இசைக் கூட்டுச்சராசரியைக் காண்க.

10, 20, 30, 40, 50

X	10	20	30	40	50
1/X	1/10	1/20	1/30	1/40	1/50
1/X	0.1	0.05	0.033	0.025	0.02
					$\Sigma \frac{1}{X}$=0.228

$$HM = \frac{N}{\sum \frac{1}{X}}$$

$$= \frac{5}{0.228}$$

$$HM = 21.93$$

எடை கிராம்களில்	14	15	16	13	17
நிகழ்வெண்	20	35	18	13	14

$$HM = \frac{\sum f}{\sum fxYx}$$

14

கைவர்க்க சோதனையும் பொருத்த நேர்த்தியும் (Chi-Square Test and Goodness of fit)

கைவர்க்க சோதனை என்பது ஒரு முக்கியத்துவமிக்க சோதனையாகும். எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வெண்களால் வகுக்கப்பட்டு பதிவீடு மற்றும் எதிர்பார்ப்பு நிகழ்வெண்களில் உள்ள விலக்க வர்க்கத்தின் கூட்டுத்தொகை கைவர்க்கம் எனப்படும்.

$$\chi^2 = \sum\left(\frac{O-E}{E}\right)^2$$

χ^2 = கை வர்க்கம்

$\sum$ = கூட்டுத்தொகை

O = பதிவீடு நிகழ்வெண்

E = எதிர்பார்ப்பு நிகழ்வெண்

Chi என்ற சொல் கிரேக்க வார்த்தையிலிருந்து தோன்றியது. Kye என உச்சரிக்கப்படுகிறது. இதன் குறியீடு χ இவ்விதமாகக் குறிக்கப்படுகிறது. χ^2 சோதனை பிஸ்சர் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டு பியர்ஸன் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டதாகும். கைவர்க்கம் ஒரு ஆய்வின் சராசரியை சோதனை செய்ய பயன்படுகிறது. இது பொருத்த நேர்த்தி (Goodness of fit) ஆய்வு செய்வதற்கும் பயன்பட்டு வருகிறது. ஒரு ஆய்வை கொண்டு செலுத்தும் பொழுது அவ்வாய்வு ஒரு எதிர்பார்ப்பு முடிவைக் கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு பண்பு கலப்பு விகித சோதனை செய்த பொழுது F_2 சந்ததியின் மகவு (Offspring) 3:1 (3/4 உயரம் 1/3 குட்டை) என்ற விகிதத்தில் தோன்றும். இந்த 3:1 விகிதம் எதிர்பார்ப்பு முடிவு அல்லது கோட்பாட்டு முடிவாக இருக்கும்.

பதிவிடப்பட்ட முடிவோடு எதிர்பார்ப்பு முடிவுடன் பதிவிடப்பட்ட முடிவு ஒத்துப்போனால் அம்முடிவு நன்று (Good) அல்லது இப்பொருத்தம் நன்று என்பர்.

பதிவீடு முடிவு மிக அதிகமாகவோ அல்லது மிகக்குறைவாகவோ இருந்தால் அப்பொழுது அம்முடிவு நன்று இல்லை என்பதாகவோ அல்லது இப்பொருத்தம் மோசம் என்பதாகவோ இருக்கலாம். பதிவீடு முடிவு மிக அதிகமாகவோ அல்லது மிகக் குறைவாகவோ இருந்தால் அப்பொழுது

அம்முடிவு நன்று அல்ல அல்லது இப்பொருத்தம் மோசம் ஆகும். இவ்விதமாக χ^2 சோதனை பொருத்த நேர்த்தி (Goodness of fit) சோதனைக்குப் பயன்பட்டு வருகிறது.

எதிர்பார்ப்பு நிகழ்வெண்களுக்கும் (முடிவுகளுக்கும்) பதிவீடு நிகழ்வெண்களுக்கும் இடைப்பட்ட வேறுபாட்டை கைவர்க்க சோதனை அளவிடுகிறது. எதிர்பார்ப்பு மற்றும் பதிவீடு நிகழ்வெண்களுக்கு இடையே வேறுபாடு இல்லாமல் இருந்தால் அக்கை வர்க்கம் பூஜ்யம் ஆக இருக்கும். χ^2 பூஜ்யமாக இருந்தால் இந்த சோதனை அல்லது கோட்பாடு பொருத்தம் என்பது அறியப்படும். எதிர்ப்பார்ப்பு மற்றும் பதிவீடு (Observed) நிகழ்வெண்களுக்கு இடையேயான வேறுபாடு முக்கியத்துவம் அற்றது. இந்நிலையில், இக்கோட்பாடு ஏற்கப்படுகிறது.

கணக்கிடப்பட்ட χ^2 மதிப்பு எதிர்பார்ப்பு நிகழ்வெண்ணைவிட அதிகமாக இருந்தால் அம்மாறுபாடு முக்கியத்துவமிக்கது. இந்நிலையில் இக்கோட்பாடு ஒதுக்கப்படுகிறது. எதிர்பார்ப்பு மதிப்பீடைக் காட்டிலும் கணக்கிடப்பட்ட χ^2 மதிப்பு குறைவாக இருந்தால் இம்மாறுபாடு முக்கியத்துவமற்றதாக (not significant) உள்ளது.

ஆகவே, கைவர்க்க சோதனை முக்கியத்துவத்தின் ஒரு சோதனையாக உள்ளது. ஏனென்றால், ஒரு பதிவீட்டில் அல்லது சோதனையில் பதிவீடு நிகழ்வெண்களுக்கு எதிர்பார்ப்பு நிகழ்வெண்களுக்கும் இடையேயான வேறுபாட்டை சோதிப்பதற்கு χ^2 பயன்படுகிறது. பொருத்த நேர்த்தியை ஆய்வு செய்வதற்கு χ^2 அட்டவணை என அழைக்கப்படும் ஒரு அட்டவணை உள்ளது. இந்த அட்டவணை வெவ்வேறு விழுக்காட்டு அளவுகளில் அட்டவணை மதிப்பீடுகளைத் தருகிறது. பொதுவாக, 5% அல்லது 1% அளவு கருத்தில் கொள்ளப்படுகிறது.

தற்சார்பு படிநிலை

(Degree of freedom)

சோதனையில் செயற்படும் வகுப்புகளின் எண்ணிக்கையை χ^2 சோதனை சார்ந்துள்ளது. இதுவே தற்சார்பு படிநிலை என அழைக்கப்படுகிறது. ஒரு சோதனையில் செயற்படும் வகுப்புகளின் எண்ணிக்கையைக் குறித்துக் காட்டுவதற்கு தற்சார்பு படிநிலை பயன்படுத்தப்படுகிறது. தற்சார்பு படிநிலை எண்ணிக்கை வகுப்புகளின் மொத்த எண்ணிக்கையைக் காட்டிலும் எப்பொழுதும் ஒன்று குறைவாகவே இருக்கும். தற்சார்பு படிநிலையை எளிய வாய்ப்பாடு மூலம் காட்டலாம்.

$$df = n - 1,$$

df என்பது தற்சார்பு படிநிலை

n என்பது வகுப்புகளின் மொத்த எண்ணிக்கை.

நாணயம் சுண்டிவிடும் சோதனையில், தலை மற்றும் வால் (head and tail) எனும் இரு சாத்தியங்கள் அல்லது வகுப்புகள் உள்ளன. எனவே, தற்சார்பு படிநிலை 2-1=1 என்றவாறு உள்ளது. குழந்தைப்பேறு விவாகாரத்தில் ஆண் அல்லது பெண் சாத்தியமே உள்ளது. எனவே, இங்கேயும் தற்சார்பு படிநிலை (df) 2-1=1 ஆக உள்ளது.

ABO குருதிக் குழுமத்தில் ஒரு நபர் A அல்லது B அல்லது AB அல்லது O வகைக் குருதியைக் கொண்டிருக்கலாம். இங்கு வகுப்புகளின் மொத்த எண்ணிக்கை 4. எனவே df ஆனது 4-1=3 ஆக உள்ளது. ஒரு பகடையில் எண்களுடன் கூடிய 6 பக்கங்கள் உள்ன. எனவே, பகடையின் df மதிப்பு 6-1=5 ஆக உள்ளது.

Null Hypothesis
இல்லாநிலை கோட்பாடு

χ^2 சோதனை மேற்கொள்ளப்பட்ட பொழுது, எதிர்பார்ப்பு முடிவுகளுக்காக ஒரு ஊகம் பண்ணப்படுகிறது. எதிர்ப்பார்ப்பு முடிவுகளுக்காக χ^2 சோதனையில் பண்ணப்படும் இவ்வூகம் இல்லாநிலை கோட்பாடு என அழைக்கப்படுகிறது. இக்கோட்பாட்டின்படி பதிவிடப்பட்ட மதிப்பு மற்றும் எதிர்பார்ப்பு மதிப்பு ஆகியவற்றின் இடையேயான வேறுபாடு '0' (பூஜ்யம்). எனவே, இது இல்லாநிலை கோட்பாடு என அழைக்கப்படுகிறது. இக்கோட்பாடு சுருக்கமாக HO என குறிக்கப்படுகிறது.

இல்லாநிலைக் கோட்பாட்டினை ஒரு நாணய சுண்டிவிடும் சோதனை மூலம் விளக்கிக் காட்ட முடியும். ஒரு நாணயத்தை 100 தடவைகள் சுண்டிவிட்ட பொழுது 50 தடவைகள். தலை தோன்றலாம். இன்னொரு 50 தடவைகள் வால் தோன்றலாம் என நாம் அனுமானிப்போம். இதுவே இல்லாநிலைக் கோட்பாடு எனப்படும். 48 தடவைகள் தலைகள் 52 தடவைகள் வால் தோன்றினால் இக்கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதற்குப் பதிலாக, 90 தடவைகள் தலைகளும் 10 தடவைகள் வால்களும் தோன்றினால் இக்கோட்பாடு ஏற்கப்படாமல் நிராகரிக்கப்படுகிறது.

χ^2 சோதனையைக் கணக்கிடுவதற்கு கீழ்க்கண்ட படிநிலைகள் (Steps) பின்பற்றப்படுகின்றன.

1. இல்லாநிலைக் கோட்பாடு முன் வைக்கப்படுகிறது. பதிவிடப்பட்ட மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பு (O-E)க்கு இடையேயான வேறுபா

கணக்கிடப்பட வேண்டும். விலக்கங்களை $(O-E)^2$ வர்க்கமூலமாக்க வேண்டும். $(O-E)^2$யை அதன் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வெண்ணால் E வகுக்கப்படுகிறது. 4ம் படிநிலையில் பெறப்பட்ட அனைத்து மதிப்புகளும் கூட்டப்பட வேண்டும். அந்தந்த முக்கியத்துவ மட்டங்களில் χ^2 லிருந்து அட்டவணை மதிப்பு கண்டுபிடிக்க வேண்டும். பொதுவாக மட்டம் 5% அல்லது 1% ஒரு கருதுகோள் (Inference) எழுதப்படுகிறது. χ^2ன் கணக்கிடப்பட்ட அளவு பூஜ்யமாக இருப்பின் அக்கோட்பாடு ஏற்கப்படுகிறது அட்டவணை மதிப்பைக் காட்டிலும் கணக்கிடப்பட்ட மதிப்பு அதிகமாக இருந்தால் அக்கோட்பாடு நிராகரிக்கப்படுகிறது. அட்டவணை மதிப்பைக் காட்டிலும் கணக்கிடப்பட்ட மதிப்பு குறைவாக இருந்தால் அவ்வேறுபாடு முக்கியமற்றதல்ல.

χ^2 சோதனையின் பயன்கள்

எதிர்பார்க்கப்பட்ட மற்றும் கணக்கிடப்பட்ட நிகழ்வெண்களுக்கு இடையேயான வேறுபாட்டு முக்கியத்துவத்தை கண்டறிய χ^2 சோதனை பயன்படுகிறது. இரு நிகழ்வுகளுக்கு இடையே ஒன்று சேர்வு சோதனைக்கு இது பயன்படுகிறது. நேர்த்தி பொருத்த சோதனைக்கும் இது பயன்படுகிறது.

Problem : 1

ஒரு நாணயம் 100 தடவைகள் சுண்டிவிடப்படுகின்றன. 60 தடவைகள் தலையும் 40 தடவைகள் வாழும் தோனறுகின்றன. இந்த நாணயம் ஒருசார்பற்றதா (Unbiased) என்பதை χ^2 சோதனை மூலம் மெய்ப்பித்துக் காட்டுக.

1) இல்லாநிலைக்கோட்பாடு - தலை அல்லது வால் என இரண்டிலொன்றுக்கு ஒரு சார்ப்பு இயல்பை நாணயம் கொண்டிருக்கவில்லை

2) முக்கியத்துவத்தின் மட்டம் 5%

3. எதிர்பார்ப்பு நிகழ்வெண்கள் தீர்மானிப்பு (E)

4. தற்சார்பு படிநிலை (df) = n - 1

n = நிகழ்வுகளின் எண்ணிக்கை = 2, தலை மற்றம் வால்

df = n - 1 = 2 - 1 = 1

5. உபயோகிக்கும் வாய்ப்பாடு

$$\chi = \left(\frac{(O-E)^2}{E}\right)$$

O = பதிவிடப்பட்ட நிகழ்வெண்கள்

E = எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வெண்

சாத்தியங்கள் (Possibilities)	பதிவிடப்பட்ட நிகழ்வெண்கள் (O)	எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வெண்கள் (E)
தலை	60	50
வால்	40	50

சாத்தியங்கள்	பதிவிடப்பட்ட நிகழ்வெண் (O)	எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வெண் (E)	(O-E)	$(O-E)^2$	$\frac{(O-E)^2}{E}$
தலை	60	50	60-50=10	$(10)^2 = 100$	100/50=2.0
வால்	40	50	40-50=-10	$-(10)^2 = 100$	100/50=2.0
					=4

$$\chi^2 = \Sigma\left(\frac{(O-E)^2}{E}\right) = 4$$

கணக்கிடப்பட்ட χ^2 மதிப்பு = 4

1df க்கு 5% சதவீதம் மட்டத்தில்

அட்டவணை மதிப்பு = 1

Problem : 2

இரண்டு இருதர பட்டாணிச் செடிகளை கலப்பு செய்த பொழுது F_2 சந்ததியில் 1600 பட்டாணிச் செடிகள் தோன்றின. இவற்றில் 940 மஞ்சள் உருண்டை, 260 மஞ்சள் சுருங்கிய, 340 பச்சை உருண்டை, 60 பச்சை சுருங்கிய விதைகள் தோன்றின. கைவர்க்க சோதனை மூலம் மெண்டலின் இரு பண்பு கலப்பு விகிதத்திலிருந்து (9:3:3:1) இந்த மதிப்புகள் விலகிச் சென்றனவா அல்லது உண்மையான தன்னிச்சையாக பிரிந்தொதுங்கல் ஏற்பட்டதா என்பதை அறிக.

தீர்வு - நிலைகள்

1. இல்லாநிலைக் கோட்பாடு : உண்மையானதன்னிச்சையாக பிரிந்தொதுங்கல் உள்ளது. பதிவிடப்பட்ட மதிப்புகளுக்கும் மெண்டலின் இருபண்பு கலப்பு விகிதமான 9:3:3:1க்கும் இடையே வேறுபாடு இல்லை.

2. முக்கியத்துவத்தின் மட்டம் 5%

3. தீர்மானிக்கும் எதிர்பார்ப்பு நிகழ்வெண் (E) மெண்டலின் இருபண்பு கலப்பு விகிதம் 9:3:3:1

மஞ்சள் உருண்டை =9 மொத்தம் 1600 = E = 9/16x1600 = 900

மஞ்சள் சுருங்கியது=3 மொத்தம் 1600 = E = 3/16x1600 = 300

பச்சை உருண்டை =3 மொத்தம் 1600 = E = 3/16x1600 = 300

பச்சை சுருங்கியது =1 மொத்தம் 1600 = E =1/16x1600= 100/1600

4.. தற்சார்பு படிநிலை = n - 1

கணக்கீடு $\chi^2 = \sum\left(\frac{(O-E)^2}{E}\right)$

இங்கு O = பதிவிடப்பட்ட மதிப்பு

E = எதிர்பார்ப்பு மதிப்பு

மாறியல்கள்	O	E	O-E	(O-E)²	$\frac{(O-E)^2}{E}$
மஞ்சள் உருண்டை	940	900	40	1600	1.77
மஞ்சள் சுருங்கியது	260	300	-40	1600	5.33
பச்சை உருண்டை	340	300	40	1600	5.33
பச்சை சுருங்கியது	60	100	-40	1600	16.00
				$\sum$	= 28.43

$$X^2 = \sum\left(\frac{(O-E)}{E}\right) = 28.43$$

கணக்கிடப்பட்ட X^2 மதிப்பு = 28.43

மிக்கான 5% முக்கித்துவ மட்டத்தில் அட்டவணை χ^2 மதிப்பு = 7.81

Inference

அட்டவணை χ^2 மதிப்பு (7.81) கணக்கிடப்பட்ட χ^2 மதிப்பு (28.43) அதிகமாக உள்ளது. எனவே, இக்கோட்பாடு நிராகரிக்கப்படுகிறது. இன்னொரு வகையில் உண்மையான தன்னிச்சையாக பிரிந்தொங்குதல் அல்லது மெண்டலின் இருபண்பு கலப்பு விகிதத்திலிருந்து 9:3:3:1 பதிவிடப்பட்ட மட்ட மதிப்புகள் விலகிச் செல்கின்றன.

Problem : 3

ஹெட்டிரோசைகஸ் வகையான ஒரு கறுப்பு எலியை இன்னொரு ஹெட்டிரோசைகஸ் வகையான கறுப்பு எலியுடன் கலப்பு செய்த பொழுது F_2 சந்ததியில் 43 கறுப்பு, 15 க்ரீம், 22 அல்பினோ நிறங்கொண்ட மகவுகள் (Offsprings) தோன்றின. கைவர்க்கத்தைப் பயன்படுத்தி 9:3:4 விகிதங்கொண்ட மரபியல் கோட்பாடு தரவுடன் ஒத்துள்ளதை இது ஆய்க.

தீர்வு

நிலைகள்

1) இல்லாநிலைக் கோட்பாடு 9:3:4 என்ற மரபியற் கோட்பாடு தரவுடன் ஒத்து இருக்கிறது.

2) முக்கியத்துவ மட்டம் 5%

3) தீர்மானிக்கும் எதிர்பார்ப்பு நிகழ்வெண்கள் (E)

மரபியற் கோட்பாடு 9:3:4

∴ கறுப்பு	= 9	மொத்த மகவு = 80	∴ E = 9/16x80	= 45
க்ரீம்	= 3	மொத்த மகவு = 80	∴ E = 3/16x80	= 15
அல்பினோ	= 4	மொத்த மகவு = 80	∴ E = 4/16x80	= 20
	16			80

தற்சார்பு படிநிலை கண்டறிதல் : df = n - 1 = 3 - 1 = 2

கணக்கீடு

$$\chi^2 = \sum\left(\frac{(O-E)^2}{E}\right)$$

இங்கு,

O = பதிவிடப்பட்ட மதிப்பு

E = எதிர்பார்க்கப்பட்ட மதிப்பு

மாறியங்கள்	O	E	O-E	$(O-E)^2$	$\sum\left(\frac{(O-E)^2}{E}\right)$
கறுப்பு	43	45	-2	4	0.08
கிரீம்	15	15	0	0	0
அல்பினோ	22	20	2	4	0.20
					$\sum = 0.28$

$$X^2 = \sum\left(\frac{(O-E)^2}{E}\right) = 0.28$$

கணக்கிடப்பட்ட χ மதிப்பு = 0.28

2dfக்கு முக்கியத்துவம் மட்டம் (அளவு) = 5%

அட்டவணை χ^2 மதிப்பு = 5.96

Inference

கணக்கிடப்பட்ட χ^2 மதிப்பு (0.28). அட்டவணை χ^2 மதிப்பை விட (5.96) குறைவாக உள்ளது. எனவே இக்கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இன்னொரு வகையில் பதிவிடப்பட்ட மதிப்பு 9:3:4 விகிதத்துடன் இது ஒத்து இருக்கிறது.

16

சிதறல் அளவீடுகள்
(Measures of Dispersion)

ஒரு தரவின் மைய மதிப்பீட்டைச் சுற்றிலும் தனித்தனி மதிப்பீடுகளின் விலக்கம், சிதறல் அளவீடு என அழைக்கப்படுகிறது. இதனை மாறுபாட்டு அளவீடு (measure of variation) எனவும் அழைப்பர். உருப்படிகளின் மாறுபாட்டு அளவைக்கு இது ஏதுவாகிறது. நான்கு பருவங்களுக்கு மூன்று தென்னை மரங்களில் விளைந்த தேங்காய் விளைச்சல் மாறுபாட்டு அளவீடை கண்கூடாக எளிதாக பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

வயலில் உள்ள தென்னை மரங்கள்

வரிசை	தென்னை1	தென்னை2	தென்னை3	தென்னை4	மொத்தம்	சராசரி
மரம்-1	7	12	11	10	40	10
மரம்-2	9	11	8	12	40	10
மரம்-3	12	8	10	10	40	10
மரம்-4	10	10	7	13	40	10

இந்நான்கு மரங்களின் சராசரி சமமாக உள்ளது. ஆனால் பருவ வேறுபாடுகளில் மகசூல்கள் மாறுபட்டுள்ளன. எனவே, அடிப்படையில் பருவ வேறுபாடுகளைப் பற்றி கூற இயலாது. இதனைப் புரிந்து கொள்ள பரவு அளவீடைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். சராசரி மதிப்பிலிருந்து தொகுதியின் மதிப்புகள் எந்த அளவிற்கு மாறபடுகின்றதோ அந்த அளவே பரவல் / சிதறல் அளவை என அழைக்கப்படும். எனவே, சராசரியின் நம்பகத்தன்மை சிதறல் அளவீட்டால் நிரூபிக்கப்படுகிறது. அதாவது, சராசரி என்பது பரவலின் பிரதிநிதித்துவ எண்ணைக் காண்பிக்கிறது. ஆனால், சிதறல் அளவை என்பது பிரதிநிதித்துவ எண்ணிலிருந்து தொகுதியின் உருப்படிகள் எந்த அளவிற்கு விலகி உள்ளன என்பதைக் காட்டுகிறது.

முக்கியத்துவம்

ஒரு சராசரியின் நம்பகத்தன்மையை இது நிச்சயிக்கிறது. மாறுபாட்டுத்திறனைக் கட்டுப்படுத்துவதற்கு இது அடித்தளமாக அமைகிறது. மாறுபாட்டுத்தன்மை சம்பந்தப்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரவுகளை ஒப்பிடுவதற்கு இது உதவுகிறது. சிதறல் அளவையை வீச்சு (Range) கால்ம விலக்கம் (Quartile deviation) கூட்டுச்சராசரி விலக்கம் (Mean deviation) திட்ட விலக்கம் (Standard deviation) லாரென்ஷ் வளைவு (Lorenz curve) என ஐந்து முறைகளில் கணக்கிடலாம். இனி இவற்றை ஒவ்வென்றாகக் காண்போம்.

1. வீச்சு

தரவுகளின் ஒரு குவையின் (Set) மிகப் பெரிய மதிப்பிற்கும் மிகச்சிறிய மதிப்பிற்கும் இடைப்பட்ட வேறுபாடே வீச்சு எனப்படும்.

வீச்சு. = மிகப்பெரிய மதிப்பு

$$R = L - S$$

மதிப்பீடுகளின் ஒரு குவையினுள்ளே வேறுபாட்டுத்தன்மையின் படிநிலையின் ஒரு உட்கருத்தை வீச்சு தருகிறது. கத்திரிப்பயிர்கள் விளைச்சல், ஐந்து தருவாய்களில் 26,12,16,9,17 என உள்ளது. இதன்படி கீழ்க்கண்டவாறு வீச்சு கணக்கிடப்படுகிறது.

மிகப்பெரிய மதிப்பு = 26

மிகச்சிறிய மதிப்பு = 9

வீச்சு = L - S

= 26 - 9

= 17

புறக்கோடி மதிப்புகளின் (Extreme values) கூட்டுத்தொகையால் வீச்சு வகுக்கப்படும் பொழுது கிடைக்கும் எண் இலக்கம் வீச்சின் குணகம் (Co efficient) என அழைக்கப்படுகிறது.

$$\text{வீச்சின் குணகம்} = \frac{\text{மிகப்பெரிய மதிப்பு} - \text{மிகச்சிறிய மதிப்பு}}{\text{மிகப்பெரிய மதிப்பு} + \text{மிகச்சிறிய மதிப்பு}}$$

எனவே, வீச்சின் குணகம் $= \dfrac{L-S}{L+S}$

பின்வருபனவற்றிலிருந்து வீச்சு மற்றும் வீச்சுக் குணகம் காண்க.

24,12,16,11,40,42

R = L - S

= 42-11

= 31

வீச்சுக் குணகம் (CR) $= \dfrac{L-S}{L+S}$

$$= \frac{42-11}{42+11}$$

$$= \frac{31}{53} = 0.58$$

வீச்சுக் குணகம் (CR) = 0.58

நிறைகள்

நன்கு வரையறுக்கப்பட்டது, கணக்கிடவும் புரிந்து கொள்ளவும் இது மிகவும் எளிதானது. தரவுகளுக்கு இடையேயான வேறுபாட்டு இயல்வை அறிவதற்கு இது உதவுகிறது. மதிப்பீடுகளின் குவையில் தோன்றும் மாறுபாட்டினை அறிய உதவுகிறது. பங்குச்சந்தை விலை நிலவரம், வானிலை அறிக்கை தயாரிப்பதற்கும் இது பயன்படுகிறது.

வீச்சு நிலையானதல்ல கணக்கிடுவதற்கு இது ஒரு பண்பற்ற முறை. ஒரு தரவின் இரு புறக்கோடி மதிப்பிடுகளை மட்டும் இது தழுவியுள்ளது. புறக்கோடி மதிப்புகள் இயல்புக்கு மாறாக இருந்தால் வீச்சானது தவறான வழிக்கு ஏதுவாகிவிடும்.

2. கால்ம விலக்கம்

முதல் கால்மத்திற்கும் மூன்றாம் கால்மத்திற்கும் இடையே தோன்றும் பாதி வேறுபாடு, கால்ம விலக்கம் என அழைக்கப்படும். கால்ம விலக்கம் Q எனக் குறிக்கப்படுகிறது. கீழக்க்ண்ட வாய்ப்பாட்டின்படி கால்ம விலக்கம் கணக்கிடப்படுகிறது.

$$Q = \frac{Q_3 - Q_1}{2}$$

கால்ம விலக்கத்தை பாதி கால்ம இடைவீச்சு (Semi interquartile range) எனவும் அழைப்பர்.

ஒரு தரவில், மாறியலின் வீச்சு மூன்று கால்மங்களை குழுமங்களாக்க முடியும். அவைகளாவன 25%, 50%, 75%

வீச்சு மாறியலின் 1/4வது அல்லது 25% யை முதல் கால்மம் என்பர். இது Q_1 என குறிக்கப்படுகிறது. மாறியல் வீச்சின் 3/4 வகை அல்லது 75%வை மூன்றாம் கால்மம் என அழைக்கப்படுகிறது. இது Q_2 என குறிக்கப்படுகிறது.

மாறியல் வீச்சின் 50%யை இடைநிலை (Median) என்பதோடு இது Q_3 என குறிக்கப்படுகிறது.

Q_1 மற்றும் Q_2விற்கு இடைப்பட்ட தொலைவு 2 ஆல் வகுக்கப்படும் பொழுது பெறப்படும் மதிப்பு கால்ம விலக்கம் (Quartile deviation) என அழைக்கப்படுகிறது. Q_1 மற்றும் Q_3க்கு இடைப்பட்ட தொலைவு கால்மஇடை விலக்கம் எனப்படும். கால்மஇடை விலக்கத்தை 2ஆல் வகுத்தால் அது பாதி கால்ம இடை விலக்கம் எனப்படும்.

நிறைகள்

வரையறுக்கப்பட்டது. மிகவும் எளிதானது. புறக்கோடி மதிப்புகளால் பாதிக்கப்படாதது. திறந்த முனை பகிர்வுக்கு இதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

குறைகள்

இது 50% மதிப்புகளை மட்டும் அடிப்படையாக கொண்டுள்ளதால் இது நம்பகமானது அல்லது உருப்படிகளின் மாறியலால் பாதிக்கப்படுகிறது. மென்மேலும் கணித முறைகளுக்கு பயன்படுவதில்லை.

Problem : 1

வெள்ளரியின் எடை முதற் கால்மத்தில் (Q_1) 98 கிராம் மூன்றாம் கால்மத்தில் (Q_3) 103 கிராம் என மாறியல் வீச்சு உள்ளது. கால்ம விலக்கத்தை கண்டறிக.

$$Q = \frac{Q_3 - Q_1}{2}$$

Q_1 = 98கி

Q_3 = 93கி

$$Q = \frac{103-98}{2} = \frac{5}{2} = 2.5 \text{ கி}$$

பின்வரும் பரவலுக்கான கால்ம விலக்கத்தை கண்டறிக

X	10	20	30	40	50	60
f	4	7	15	8	7	2

செய்முறை

x	f	cf
10	4	4
20	7	11
30	15	26
40	8	34
50	7	41
60	2	43

$$Q_1 = \left(\frac{N+1}{4}\right)$$ யின் புள்ளியின் அளவு

N/4 என்பது வாய்ப்பாடு

N/4 என்பது 43

$$= \left(\frac{43+1}{4}\right)$$ யின் புள்ளியின் அளவு

= 11ன் மதிப்பு

= 20

$$Q_3 = 3\left(\frac{N+1}{4}\right)$$ யின் புள்ளியின் மதிப்பு

$$3 \times \frac{44}{4}$$ யின் மதிப்பு

= 33ன் மதிப்பு

= 40

பின்வரும் தரவலுக்கான கால்ம விலக்கத்தையும் கால்ம

விலக்க குணகத்தையும் காண்க

$$Q.D = \frac{Q_3 - Q_1}{2} = \frac{40 - 20}{2} = 10$$

$$Q \quad D = \frac{Q_3 - Q_1}{Q_3 + Q_1} = \frac{40 - 20}{40 + 20} = \frac{20}{60} = 0.33$$

பின்வரும் தரவலுக்கான கால்ம விலக்கத்தையும் கால்ம விலக்க குணகத்தையும் காண்க

வகுப்பு இடைவெளி (இலை நீளம்)	10 - 12	12-14	14-16	16-18	18-20	20-22	22-24
நிகழ்வெண்	2	9	20	25	24	15	5

செய்முறை

இலை நீளம் (செ.மீல்)	நிகழ்வெண் (f)	ஒன்றுதிரண்ட நிகழ்வெண் (cf)
10-12	2	2
12-14	9	11
14-16	20	31
16-18	25	56
18-20	24	80
20-22	15	95
22-24	5	100
	100	

$$Q_\cdot = \frac{Q_1 - Q_1}{2}$$

Q_1 யைக் கணக்கிடுவதற்கு N/4 என்ற வாய்ப்பாட்டை பயன்படுத்தல்.

இங்கு N என்பது 100

எனவே $\frac{N}{4} = \frac{100}{4} = 25$

25 என்பது 14–16 வகுப்பினுள்ளே அமைவதால் இது முதற்கால்மம் என எடுத்துக் கொள்ளப்படுகிறது. இப்பொழுது கீழ்க்கண்ட வாய்ப்பாடு மூலம் Q_1யைக் கணக்கிட முடியும்.

$$Q_1 = L + \frac{(N/4 - cf)}{f} \times C$$

$$Q_1 = 14 + \frac{25 - 11}{20} \times 2 = 15.40$$

$$Q_3 \times \frac{3N}{4} \text{ ன் மதிப்பு } \frac{300}{4}$$

அதாவது, 75ன் மதிப்பு

ஆகவே, 18-20 வகுப்பு இடையீடு

$$Q_3 = L + \frac{\frac{3N}{4} - m}{f} \times C$$

$$= 18 + \frac{75 - 56}{24} \times 2 = 19.58$$

குணகவிலக்கம் QD $= \frac{Q_3 - Q_1}{2} = \frac{19.58 - 15.40}{2} = 2.09$

ஒன்றுதிரண்ட குணக விலக்கம் CQD $= \frac{Q_3 - Q_1}{Q_3 + Q_1} = \frac{19.58 - 15.40}{19.58 + 15.40} = \frac{2.09}{34.98}$

$$= 0.12$$

3. கூட்டுச்சராசரி விலக்கம்

Mean Deviation (MD)

கூட்டுச்சராசரியிலிருந்து தனித்தனி மதிப்புகளுக்கான விலக்கங்களின் சராசரி, கூட்டுச்சராசரி விலக்கம் எனப்படும். இதனை சராசரி விலக்கம் எனவும் அழைப்பர். ஒரு தரவுவிலுள்ள ஒவ்வொரு மதிப்பும் கூட்டுச்சராசரியிலிருந்து விலகிச் செல்கிறது. விலகிச் செல்லும் இவ்வேறுபாடு விலக்கம் என அழைக்கப்படுகிறது. இது δ (Delta) என்ற குறியீடு மூலம் குறிக்கப்படுகிறது. இவ்வேறுபாடு கூட்டுச்சராசரிக்கு மேல் இருந்தால் அது எதிர்மறை விலக்கம் (negative deviation) எனபப்படும். கூட்டுச்சராசரிக்கு கீழ் இருந்தால் அது நேர்மறை விலக்கம் எனப்படும்.

கூட்டுச்சராசரியுடன் மதிப்பு பொருந்தும் பொழுது விலக்கம் பூஜ்யமாக உள்ளது. கீழ்க்கண்ட வாய்ப்பாடு மூலம் கூட்டுச்சராசரி விலக்கம் கணக்கிட முடியும்.

குழுமமற்ற தரவுக்குரிய வாய்ப்பாடு = $MD = \frac{\sum D}{N}$

குழுமத்தரவுக்குரிய வாய்ப்பாடு $MD = \frac{\sum fD}{N}$

D	=	என்பது விலக்கம்
f	=	நிகழ்வெண்
N	=	உருப்படிகளின் மொத்த எண்ணிக்கை

முக்கியத்துவம்

கணக்கிடுவதற்கும் புரிந்து கொள்வதற்கும் எளிதானது. அனைத்து பதிவீடுகளையும் சார்ந்ததாக உள்ளது. புறக்கோடி மதிப்புகளால் பாதிக்கப்படுவதில்லை. நம்பகத்தக்கது. ஒப்பிடுவதற்கு ஏற்றது. எந்தவொரு சராசரியிலிருந்தும் கூட்டுச்சராசரி விலக்கம் பெறப்படுவதால் இது ஒரு இணக்கமான முறையாகும். அனைத்து விலக்கங்களையும் நேர் விலக்கங்களாகக் கொள்ளுவதால் இது ஒரு சிறந்த கணக்கீட்டு முறை ஆகாது.

கூட்டுச்சராசரி குணகம்

(Coefficient of mean deviation)

கூட்டுச்சராசரி விலக்கத்தின் குணகம் என்பது கூட்டுசராசரி விலக்கத்திற்கும் கூட்டுச்சராசரிக்கும் உள்ள விகிதமாக இக்கூட்டுச்சராசரி விலக்கக் குணகம் உள்ளது.

| குணகம் $= \frac{MD}{Mean}$

$$\frac{\text{கூட்டுச்சராசரி விலக்கம்}}{\text{கூட்டுச்சராசரி}}$$

Problem : 1

கிராம் அளவுகளில் பீட்ருட்டுகளின் எடை மூலம் பெறப்பட்ட கீழ்க்கண்ட தரவுகளுக்கு கூட்டுச்சராசரி விலக்கம் மற்றும் கூட்டுச்சராசரியின் குணகம் காண்க.

80,100,120,130,140,160,180

கீழ்க்கண்ட வாய்ப்பாட்டினைப் பயன்படுத்தி கூட்டுச்சராசரி கணக்கிடப்படுகிறது. $\overline{X} = \frac{\sum X}{N}$

$$\frac{910}{7} = 130$$

$$\overline{X} = 130$$

II. கூட்டுச்சராசரியிலிருந்து ஒவ்வொரு மதிப்பின் விலக்கம் கணக்கிடப்படுகிறது.

மதிப்பு (கிராம்களில்)	80	100	120	130	140	160	180	
கூட்டுச்சராசரி	130	130	130	130	130	130	130	
விலக்கம்	-50	-30	-18	0	10	30	50	18

$$\sum D = 18$$

III. கீழ்க்கண்ட வாய்ப்பாட்டினைப் பயன்படுத்தி கூட்டுச்சராசரி விலக்கம் கணக்கிட முடியும்.

$$MD = \frac{\sum D}{N}$$

$$= \frac{18}{7}$$

கூட்டுச்சராசரி $= \frac{MD}{Mean}$

$$= \frac{2.57}{13}$$

= 0.19கிராம்

Problem : 2

கீழ்க்கண்ட அட்டவணை 27 கேரட்டுகளின் எடைகளைக் காட்டுகிறது. இதன் கூட்டுச்சராசரி விலக்கம் மற்றும் கூட்டுச்சராசரி விலக்கத்தின் குணகத்தைக் கணக்கிடுக.

எடை (கிராம்களில்)	7	9	12	8	10	11
கேரட்டுகளின் எண்ணிக்கை	3	5	8	7	3	1

ஐந்து பத்தி வரிசைகளுடன் கூடிய ஒரு அட்டவணை தயாரிக்கப்படுகிறது. கேரட்டுகளின் எடையும் (X) எண்ணிக்கையும் (f) முதல் இரண்டு பத்தி வரிசையில் குறிக்கப்படுகின்றன. fx பெறுவதற்கு கேரட்டுகளின் எண்ணிக்கையை வைத்து எடையைப் பெருக்கப்பட்டு மூன்றாம் பத்தி வரிசையில் பதியப்படுகிறது. அனைத்து fx மதிப்பீடுகள் கூட்டப்பட்டு பெறப்படும் $\sum fx$, மூன்றாம் பத்தி வரிசையின் அடியே எழுதப்படுகிறது. கீழ்க்கண்ட வாய்ப்பாட்டை பயன்படுத்தி கூட்டுச்சராசரி கணக்கிடப்படுகிறது.

$$\overline{X} = \frac{\sum fx}{N}$$

$$= 259$$

$$N = 27$$

$$\overline{X} = \frac{259}{27} = 9.60$$

எடை X	எண்ணிக்கை f	fx	x - = D	fD
7	3	21	7-9.6=-2.6	3x2.6=7.8
9	12	45	9-9.6=-0.6	5x0.6=3
12	8	96	12-9.6=+2.4	8x2.4=19.2
8	7	56	8-9.6=-1:6	7x1.6=11.2
10	3	30	10-9.6=+0.4	3x0.4=1.2
11	1	11	11-9.6=+1.4	1x1.4=1.4
	N=27	$\sum fx = 259$	$\sum D = 9.0$	$\sum fD = 41-4$

கூட்டுச்சராசரியிலிருந்து X மதிப்பிடைக் கழிப்பதால் விலக்கம் (D) பெறப்பட்டு நான்காம் பத்தி வரிசையில் குறிக்கப்படுகிறது.

அனைத்து விலக்கங்களும் கூட்டப்பட்டு பெறப்படும் $\sum D$ நான்காம் பத்தி வரிசையின் அடியே குறிக்கப்படுகிறது. fd பெறுவதற்கு fவுடன் விலக்கம் D யைப் பெருக்கி ஐந்தாம் தூண் வரிசையில் பதியப்படுகிறது.

$\sum fD$ பெறுவதற்கு fDக்கள் கூட்டப்பட்டு அடியே ஐந்தாம் பத்தி வரிசையில் எழுதப்படுகிறது. கீழ்க்கண்ட வாய்ப்பாட்டால் கூட்டுச்சராசரி விலக்கம் கணக்கிடப்படுகிறது.

$$MD = \frac{\sum fD}{N}$$

$$\sum fD = 41.4$$

$$N = 27$$

$$= \frac{41.4}{27} = 1.53$$

$$MD = 1.53 \text{ கி}$$

கூட்டுச்சராசரி விலக்கக் குணகம் $= \dfrac{MD}{Mean}$

$$(Co.of MD) = \frac{1.53}{9.6}$$

$= 0.16$

MD $= 1.53$

Co. MD $= 0.16$

Problem : 3

ஆட்டவணையில் காணும் கிராம் அளவில் எடை கொண்ட சப்போட்ட பழங்களின் தரவுகளுக்கு கூட்டுச்சராசரி விலக்கம் மற்றும் கூட்டுச்சராசரி விலக்கக் குணகம் ஆகிய இரண்டையும் கணக்கிடுக.

சப்போட்டா கனிகளின் எடை (கிராம்களில்)	0-10	10-20	20-30	30-40	50-60	60-70
சப்போட்டா கனிகளின் எண்ணிக்கை	4	6	5	8	4	7

ஏழுபத்தி வரிசைகளுடன் கூடிய ஒரு அட்டவணை வரையப்படுகிறது. சப்போட்டாக்களின் எடைகள் முதல் பத்தி வரிசையில் பதியப்படுகின்றன. இதன் நடு இலக்கு (mid point) (x) இரண்டாம் பத்தி வரிசையில் பதியப்படுகிறது. நடு இலக்குகளின் கூட்டுத்தொகை கூட்டப்படுவதன் மூலம் கணக்கிடப்பட்டு அடியே பதியப்படுகிறது. சப்போட்டாக்களின் எண்ணிக்கை (f) மூன்றாம் பத்தி வரிசையில் குறிக்கப்படுகிறது. இதனைக் கூட்டுவதன் மூலம் பெறப்படும் $\sum f$ அடியே எழுதப்படுகிறது. fx பெறுவதற்கு fவினால் எடை (X) பெருக்கப்பட்டு நான்காம் பத்தி வரிசையில் குறிக்கப்படுகிறது. $\sum fX$ பெறுவதற்கு (X) மதிப்புகள் கூட்டப்பட்டு அடிய குறிக்கப்படுகின்றன. கீழ்க்கண்ட வாய்ப்பாட்டை பயன்படுத்தி கூட்டுச்சராசரி கணக்கிடப்படுகிறது.

$$\overline{X} = \frac{\sum fx}{\sum f} \qquad \sum fx = 1315$$

$$\sum f = 37$$

$= 1315/37 = 35.54$

Mean $= 35.54 = 31.81$ கிராம்

சப்போட்டா (கிராம்களில்)	நடுஇலக்கு x	எண்ணிக்கை (f)	fx		fD
0-10	5	4	20	-30.54	122.16
10-20	15	6	90	-20.54	123.24
20-30	25	5	125	-10.54	625.00
30-40	35	8	280	-0.54	4.32
40-50	45	4	180	+9.46	37.84
50-60	55	3	165	+19.46	58.38
60-70	65	7	455	+29.46	206.22
	$\sum x = 245$	$\sum f = 37$	$\sum fx =$ 1315	120.54	1177.16

இப்பொழுது கூட்டுசராசரியுடன் X மதிப்பை கழிப்பதால் விலக்கம் D கணக்கிடப்பட்டு ஐந்தாம் பத்தி வரிசையில் பதிவு செய்யப்படுகிறது. fD பெறுவதற்கு fஆல் விலக்கம் பெருக்கப்பட்டு ஆறாவது பத்தி வரிசையில் எடுத்து எழுதப்படுகிறது. $\sum fD$யைப் பெறுவதற்கு fD மதிப்புகள் கூட்டப்பட்டு அடியே அவ்விலக்கு பதியப்படுகிறது. கீழ்க்கண்ட வாய்ப்பாட்டின்படி கூட்டுச்சராசரி விலக்கம் கணக்கிடப்படுகிறது.

$$MD = \frac{\Sigma fD}{N} \qquad \sum fD = 1177.16$$

$$\sum f = 37$$

$$= \frac{1177.16}{37}$$

M.D. = 31.81 கிராம்

கூட்டுச்சராசரி விலக்கத்தின் குணகம் (CO.MD)	=	$\frac{MD}{Mean}$
MD	=	31.81
கூட்டுச்சராசரி	=	35.54
	=	$\frac{31.81}{35.54}$
கூட்டுச்சராசரி	=	31.81 கிராம்
எனவே,	=	0.89 கிராம்
கூட்டுச்சராசரி விலக்கக் குணகம்	=	0.89 கிராம்

திட்ட விலக்கம்
(Standard Deviation)

கார்ல் பியர்ஸன் என்பவர் 1893ல் இக்கோட்பாட்டினை அறிமுகப்படுத்தினார்.

கொடுக்கப்பட்ட விவரங்களில் கூட்டுச்சராசரியிலிருந்து பெறப்பட்ட விலக்கங்களின், வர்க்கங்களின், வர்க்கமூலமே திட்டவிலக்கம் எனப்படும். இதனைச் சுருக்கமாக SD என்றும் குறியீடாக ஸிக்மா (δ) என்றும் கூறுவர்.

கீழ்க்கண்ட வாய்ப்பாடு மூலம் திட்ட விலக்கத்தை கணக்கிட்டுக் காட்ட முடியும்.

$$SD = \sqrt{\frac{\sum\left(X - \overline{X}\right)^2}{N}}$$

SD	=	திட்ட விலக்கம்
X	=	பதிவீட்டு மதிப்பு (Observation)
$\overline{X}$	=	கூட்டுச்சராசரி
N	=	உருப்படிகளின் எண்ணிக்கை
$\sum$	=	கூட்டுத்தொகை

நிறைகள்

நன்கு வரையறுக்கப்பட்டது. நிலையான மதிப்பு உடையது. அனைத்து உருப்படிகளையும் இது உள்ளடக்கியது. மென்மேலும் கணித முறைகளுக்கு பயன்படக்கூடியது. வர்க்கமூலம் எதிர்மறை குறியீடுகளை கூட்டல் குறிகளாக ஆக்குகிறது. மாதிரி எடுத்தலின் மாறுபாடுகளால் பெரிய பாதிப்பு ஏற்படுவதில்லை. இதன் ஆய்வு முடிவு துல்லியமாக இருக்கும்.

குறைகள்

கணக்கிடுவது மிகவும் சிக்கலானது. ஒவ்வொரு உருப்படியின் மதிப்பால் இத்திட்ட விலக்கம் பாதிக்கப்படுகிறது. இது ஒரு கணித முறையல்ல.

Problem : 1

கீழ்க்கண்ட திட்ட தரவுகளுக்கு திட்ட விலக்கத்தை கணக்கிடுக.

திட்டவிலக்க கணக்கீடு - ஒன்றொன்றின் (நபரி) பதிவு (Individual observation)

இதில் முறைகள் உள்ளன.

1) நேரடி முறை - உண்மையான கூட்டுச்சராசரியிலிருந்து விலக்கம் கணக்கிடப்படுகிறது.

2) சுருக்குவழி முறை (Short cut) - ஊகக் கூட்டுச்சராசரியிலிருந்து விலக்கம் கணக்கிடப்படுகிறது.

1) நேரடி முறை

1) தொகுதியின் $\bar{X}$ உண்மையான கூட்டுச்சராசரி கண்டறியப்படுகிறது. கூட்டுச்சராசரியிலிருந்து $(X-X)$ ஒவ்வொரு மதிப்பின் விலக்கம் கண்டறியப் படுகிறது. ஒவ்வொரு மதிப்பின் விலக்கத்தை வாக்கமூலம் பண்ணிக் மொத்த வர்க்கமூல விலக்கங்கள் $\sum(X-\bar{X})^2$ கணக்கிடப்படுகின்றன. பதிவீடுகளின் (Observation) எண்ணிக்கையால் மொத்தம் வகுக்கப்படுகிறது.

$$\frac{\sum\left(X-\bar{X}\right)^2}{N}$$

உற்பத்தியின் வர்க்கமூலம் கண்டறியப்படுகிறது.

வாய்ப்பாடு

$$SD=\sqrt{\frac{\sum\left(X-\bar{X}\right)^2}{N}} \quad \text{அல்லது} \quad \sqrt{\frac{\sum\left(X-\bar{X}\right)^2}{n-1}}$$

Problem : 1

10 பயிர்களின் உயரங்களை இத்தரவுகள் குறிக்கின்றன. இதன் திட்ட விலக்கத்தைக் கணக்கிடுக.

60,60,61,62,63,63,63,64,64,70

தீர்வு

கூட்டுச்சராசரி அறியப்படுகிறது $\bar{X}$

கூட்டுச்சராசரியிலிருந்து $\left(X-\bar{X}\right)$ ஒவ்வொரு மதிப்பின் விலக்கம் கண்டறியப்படுகிறது. ஒவ்வொரு மதிப்பின் விலக்கம் வர்க்க மூலமாக்கி வர்க்கமூல விலக்கங்களின் $\sum\left(X-\bar{X}\right)$ மொத்தம் எடுக்கப்பட்ட பின்பு, பெறப்படுகிறது. $\left(X-\bar{X}\right)^2$

Nக்கு பதிலாக பதிவீடுகளின் எண்ணிக்கை 30க்கு குறைவாக இருந்தால் (<30) n - 1யைப் பயன்படுத்து (அதாவது ஒன்றுக்கு குறைவான எண்ணிக்கை எடுத்து வகுக்க வேண்டும்)

N = > 30 பதிவீடு

n = < 30 பதிவீடு

உயரம் (செ.மில்) X	$\overline{X}=63 (X-\overline{X})$	$\left(X-\overline{X}\right)^2$
60	-3	9
60	-3	9
61	-2	4
62	-1	1
63	0	0
63	0	0
63	0	0
64	1	1
64	1	1
70	7	49
$\sum X=630$		$74 \sum (X-\overline{X})^2$

$$\overline{X}=\frac{\sum X}{N}$$

$$=\frac{630}{10}=63$$

$$SD=\sqrt{\frac{\sum\left(X-\overline{X}\right)^2}{n-1}}$$ பதிவீட்டின்படி

$$= \sqrt{\frac{74}{9}} \quad \text{30க்கு குறைவு}$$

$$= \sqrt{8.22}$$

$$= 2.86$$

$$SD = 2.86$$

சுருக்கு வழி முறை

உண்மையான கூட்டுச்சராசரி கண்டுபிடிப்பதற்கு பதிலாக இங்கு நாம் ஊகக் கூட்டுச்சராசரியை எடுத்துக் கொள்கிறோம். எனவே, கணக்கீடு, எளிதாக்கப்படுகிறது. பிற செயல்முறைகள் அனைத்தும் ஒரே மாதிரிதான்.

Problem : 7

கீழ்க்கண்ட தரவுகள் 10 மாணவர்களின் உயர அளவுகளாக உள்ளன. இவற்றின் திட்டவிலக்கத்தைக் கணக்கிடுக.

60,60,61,62,63,63,63,64,64,70

தீர்வு

தரவுகளில் உள்ள மதிப்புகளின் ஏதேனும் ஒன்றை ஊகக் கூட்டுச்சராசரியாக (A) அனுமானிக்கப்படுகிறது. ஊகக் கூட்டுச்சராசரியிலிருந்து (X-A=d) ஒவ்வொரு மதிப்பின் விலக்கம் கண்டுபிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு மதிப்பின் விலக்கமும் வர்க்க மூலமாக்கி வாக்கமூல விலக்கங்களின் (d^2) மொத்தம் கணக்கிடப்படுகிறது.

வாய்ப்பாடு

$$SD = \sqrt{\frac{\sum d^2}{N} - \left[\frac{\sum d}{N}\right]^2}$$

உயரம் (செ.மில்) X	A = 61 X - A = d	d^2
60	-1	1
60	-1	1
61	0	0
62	1	1
63	2	4
63	2	4
63	2	4
64	3	9
64	3	9
70	9	81
	$-2+22$ $\sum d = 20$	$\sum d^2 = 114$

$$SD = \sqrt{\frac{\sum d^2}{N} - \left[\frac{\sum d}{N}\right]^2}$$

$$= \sqrt{\frac{114}{10} - \left[\frac{20}{10}\right]^2}$$

$$= \sqrt{11.4 - 4}$$

$$= \sqrt{7.4}$$

SD = 2.72

B. SD கணக்கீடு - பிரிநிலைத் தொகுதி (Discrete series)

இவ்வகையில் மூன்று முறைகள் உள்ளன.

1. நேரடி முறை - உண்மையான கூட்டுச்சராசரி முறை
2. சுருக்க வழிமுறை - ஊகக் கூட்டுச்சராசரி முறை
3. படிநிலை விலக்க முறை- (step deviation method)

1. நேரடிமுறை

கூட்டுச்சராசரி கணக்கிடப்படுகிறது. கூட்டுச்சராசரி மதிப்பீட்டிலிருந்து $X-\overline{X}$ வெவ்வேறு மதிப்புகளின் விலக்கத்தை கண்டறிக. விலக்கங்களை $(X-\overline{X})^2$ வர்கக மூலமாக்கி பல்வேறு மதிப்புகளின் முன்னால் அந்தந்த நிகழ்வெண்களுடன் (f) இந்த $(X-\overline{X})^2$ யைப்பெருக்கி அத்தகைய மதிப்புகள் $\sum f(X-\overline{X})^2$ அனைத்தும் கூட்டப்படுகின்றன. (N) அல்லது $\sum f$ உருப்படிகளின் எண்ணிக்கையில் $\sum f(X-\overline{X})^2$

மதிப்புகள் வகுக்கப்படுகின்றன.

$$\text{வாய்ப்பாடு } SD=\sqrt{\frac{\sum f(X-\overline{X})^2}{\sum f}}$$

$(X-\overline{X})^2$ பெறுவதற்கு விலக்கங்களை வர்க்கமூலமாக்கி ஐந்தாம் பத்தி வரிசையின் அடியில் குறிக்கப்படுகிறது. $f(X-\overline{X})^2$ அடைவதற்கு f வுடன் இந்த $(X-\overline{X})^2$ பெருக்கப்பட்டு ஆறாவது பத்தி வரிசையின் அடியில் எழுதப்படுகிறது. $\sum f(X-\overline{X})^2$ பெறுவதற்கு அனைத்து மதிப்பீடுகளும் கூட்டப்பட்டு அடியே எடுத்து எழுதப்படுகிறது. கீழ்க்கண்ட வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி திட்ட விலக்கம் கணக்கிடப்படுகிறது.

$$SD = \sqrt{\frac{\sum f(X-\overline{X})^2}{\sum f}}$$

$$= \sqrt{\frac{54}{20}}$$

$$= \sqrt{2.7}$$

விடை S.D = 1.64 செ.மீ

கீழ்க்கண்ட தரவுகளுக்கு திட்ட விலக்கம் காண்க

உருப்படிகளின் உருவளவு (செ.மீ.ல்) (size) (X)	11	10	9	8	7	6	5
நிகழ்வெண் (f)	1	2	5	5	3	3	1

ஆறு நிமிர்வு தூண் வரிசைகள் கொண்ட அட்டவணை வரையப்படுகிறது. முதல் பத்தி வரிசையில் கனிகளின் (X) நீளம் எழுதப்படுகிறது. இரண்டாம் பத்தி வரிசையில் கனிகளின் நீளம், நிகழ்வெண் (f) குறிக்கப்படுகின்றன. $\sum f$ பெறுவதற்கு அனைத்து மதிப்புகளையும் கூட்டி அதன் அடியே பதியப்படுகிறது. (fx) பெறுவதற்கான Xவுடன் f பெருக்கப்பட்டு மூன்றாம் பத்தி வரிசையில் பதியப்படுகிறது. $\sum fX$ பெறுவதற்கு fx க்கள் கூட்டப்பட்டு அடியே எடுத்து எழுதப்படுகிறது. கீழ்க்கண்ட வாய்ப்பாட்டை பயன்படுத்தி கூட்டுச்சராசரி $\overline{X}$ கணக்கிடப்படுகிறது.

$$\overline{X} = \frac{\sum fX}{f}$$

$$= \frac{160}{20}$$

$$\overline{X} = 8cm$$

விலக்கங்களை $X-\overline{X}$ பெறுவதற்கு $\overline{X}$ லிருந்து மதிப்புகள் ழிக்கப்பட்டு நான்காம் தூண் வரிசையில் குறிக்கப்படுகின்றன.

உருவளவு செ.மீல் (X)	நிகழ்வெண் (f)	fx	$(X-\overline{X})$ $\overline{X}=9$	$(X-\overline{X})^2$	$f(X-\overline{X})^2$
11	1	11	+2	+4	4
10	2	2	1	+1	2
9	5	45	0	0	0
8	5	40	-1	1	5
7	3	21	-2	4	12
6	3	18	-3	9	27
5	1	5	-4	4 16	4 16
	$\Sigma f=20$		$\Sigma fX = 160$	$\Sigma f(X-\overline{X})^2 = 54$ 68	

$$SD=\sqrt{\frac{\Sigma f(X-\overline{X})^2}{\Sigma f}}$$

$$=\sqrt{\frac{54}{20}}$$

$$=\sqrt{2.7}$$

$$Ans: SD=1.64cm$$

$$SD = \sqrt{\frac{\sum f(X-\overline{X})^2}{\sum f}}$$

$$= \sqrt{\frac{54}{20}}$$

$$= \sqrt{2.7}$$

விடை S.D = 1.64 செ.மீ

கீழ்க்கண்ட தரவுகளுக்கு திட்ட விலக்கம் காண்க

உருப்படிகளின் உருவளவு (செ.மீ.ல்) (size) (X)	11	10	9	8	7	6	5
நிகழ்வெண் (f)	1	2	5	5	3	3	1

ஆறு நிமிர்வு தூண் வரிசைகள் கொண்ட அட்டவணை வரையப்படுகிறது. முதல் பத்தி வரிசையில் கனிகளின் (X) நீளம் எழுதப்படுகிறது. இரண்டாம் பத்தி வரிசையில் கனிகளின் நீளம், நிகழ்வெண் (f) குறிக்கப்படுகின்றன. $\sum f$ பெறுவதற்கு அனைத்து மதிப்புகளையும் கூட்டி அதன் அடியே பதியப்படுகிறது. (fx) பெறுவதற்கான Xவுடன் f பெருக்கப்பட்டு மூன்றாம் பத்தி வரிசையில் பதியப்படுகிறது. $\sum fX$ பெறுவதற்கு fx க்கள் கூட்டப்பட்டு அடியே எடுத்து எழுதப்படுகிறது. கீழ்க்கண்ட வாய்ப்பாட்டை பயன்படுத்தி கூட்டுச்சராசரி $\overline{X}$ கணக்கிடப்படுகிறது.

$$\overline{X} = \frac{\sum fX}{f}$$

$$= \frac{160}{20}$$

$$\overline{X} = 8cm$$

விலக்கங்களை $X-\overline{X}$ பெறுவதற்கு $\overline{X}$ லிருந்து மதிப்புகள் கழிக்கப்பட்டு நான்காம் தூண் வரிசையில் குறிக்கப்படுகின்றன.

உருவளவு செ.மீல் (X)	நிகழ்வெண் (f)	fx	$(X-\overline{X})$ $\overline{X}=9$	$(X-\overline{X})^2$	$f(X-\overline{X})^2$
11	1	11	+2	+4	4
10	2	2	1	+1	2
9	5	45	0	0	0
8	5	40	-1	1	5
7	3	21	-2	4	12
6	3	18	-3	9	27
5	1	5	-4	4	4
	$\Sigma f=20$		$\Sigma fX = 160$	$\Sigma f(X-\overline{X})^2=54$	

$$SD=\sqrt{\frac{\Sigma f(X-\overline{X})^2}{\Sigma f}}$$

$$=\sqrt{\frac{54}{20}}$$

$$=\sqrt{2.7}$$

$$Ans: SD=1.64cm$$

Problem : 2

கீழ்க்கண்ட தரவுக்காக திட்ட விலக்கத்தைக் கணக்கிடுக அவரைகளின் எடை கிராம்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

செய்முறை

ஏழு நிமிர் பத்தி வரிசைகொண்ட அட்டவணை வரைக. முதல் பத்தி வரிசையில் வகுப்புகள் (X) எழுதப்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பின் இடைமதிப்பீடு கண்டறிந்து இரண்டாம் பத்தி வரிசையில் குறிக்கப்படுகிறது. மூன்றாம் பத்தி வரிசையில் நிகழ்வெண் (f) எழுதப்படுகிறது. $\sum f$ பெறுவதற்காக இதன் மதிப்புகள் கூட்டப்பட்டு அடியில் குறிக்கப்படுகிறது. (fm) மதிப்பை பெறுவதற்கு இடைமதிப்பீடுடன் நிகழ்வெண் பெருக்கப்பட்டு நான்காம் பத்தி வரிசையில் குறிக்கப்படுகிறது. இம்மதிப்புகளை கூட்டி பெறப்படும் $\sum fm$ அடியே எழுதப்படுகிறது. கீழ்க்கண்ட வாய்ப்பாட்டை பயன்படுத்தி கூட்டுச்சராசரி (X) கணக்கிடப்படுகிறது.

$$\overline{X} = \frac{\sum fm}{\sum f}$$

$$= \frac{835}{27}$$

$\overline{X}$ = 30.9 கிராம்

வகுப்புகள் (X)	இடைமதிப்பு m	நிகழ்வெண் f	fm	$(m-\overline{X})$ $\overline{X}=30.9$	$(m-\overline{X})^2$	$f(m-\overline{X})^2$
0-10	5	3	15	25.9	51.8	155.4
10-20	15	5	75	15.9	31.8	159
20-30	25	6	130	5.9	11.8	70.8
30-40	35	4	140	4.1	8.2	32.8
40-50	45	4	180	14.1	28.2	112.8
50-60	55	3	165	24.1	48.2	144.6
60-70	65	2	130	34.1	68.2	136.5
		$\sum f = 27$	$\sum fm = 835$	124.1		$\sum f(m-\overline{X})^2 = 843.8$

$\left(m-\overline{X}\right)$ பெறுவதற்கு $\overline{X}$ லிருந்து இடைமதிப்பீடுகள் mகழிக்கப்படுகின்றன.

$\left(m-\overline{X}\right)^2$ பெறுவதற்கு $\left(m-\overline{X}\right)$ மதிப்புகள் வர்க்கமூலமாக்கப்படுகின்றன..

$f\left(m-\overline{X}\right)^2$ பெறுவதற்காக $\left(m-\overline{X}\right)^2$ மதிப்புகள் பெருக்கப்படுகின்றன.

பெறுவதற்கு $\sum f\left(m-\overline{X}\right)^2$ அனைத்து மதிப்புகளும் கூட்டப்பட்டு கடைசித் பத்தி வரிசையின் அடியே பதியப்படுகிறது.

கீழ்க்கண்ட வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி SD கணக்கிடப்படுகிறது.

$$SD=\sqrt{\frac{\sum f\left(m-\overline{X}\right)^2}{\sum f}}$$

$$=\frac{843.8}{27}$$

$$=\sqrt{31.25}$$

SD = 5.59கிராம்

திட்டப்பிழை

(Standard Error (S.E)

திட்டப்பிழை என்பது இனத்தொகையின் கூட்டுச்சராசரிக்கும் அதன் மாதிரிக்கூறுக்கும் இடைப்பட்ட வேறுபாடாகும்.

பதிவீடுகளின் மொத்த எண்ணிக்கையின் வர்க்க மூலத்தால் வகுத்த மாதிரிக் கூறின் திட்ட விலக்க விகிதமாக திட்டப்பிழை விளக்கப்படுகிறது.

$$\text{திட்டப்பிழை} = \frac{SD}{\sqrt{N}}$$

SD = திட்டவிலக்கம்

N = பதிவீடுகளின் (Observation) மொத்த எண்ணிக்கை

திட்டப்பிழையின் பயன்பாடு

இரு மாதிரிக் கூறுகளுக்கு இடையே தோன்றும் வேறுபாட்டினை அறிந்து கொள்வதற்கு இது உதவுகிறது. மாதிரிக்கூறின் உருவளவை / பருமனை கணக்கிடுவதற்கு இது உதவுகிறது. அறியப்பட்ட அல்லது அறியப்படா இனத்தொகையிலிருந்து மாதிரிக்கூறு எடுக்கப்பட்டதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்க இது உதவுகிறது.

மாறுபாடு (Variance) (V)

மாறுபாட்டிலிருந்து திட்ட விலக்கத்தைக் கணக்கிட முடியும்.

$$V = SD^2$$

$$SD = \sqrt{V}$$

மாறுபாடு எளிதாகக் கணக்கிடக் கூடியது. மாறுபாட்டு இயல்பினை தெளிவாக சுட்டிக் காட்டுகிறது. பெரும் எண்ணிக்கையைத் தருவது மட்டும் மாறுபாட்டின் ஒரு முறையாகும்.

17

தரவுகளின் வரைகலை வெளிப்பாடு
(Graphical Representation of Data

ஹிஸ்டோக்ராம்

ஹிஸ்டோக்ராம் என்பது ஒருவகை வரைகலை. இதில் அடங்கிய நிகழ்வெண்கள் நிமிர்நிலை செவ்வக உருவங்களில் உள்ளன. இது ஒரு பரப்பளவு வரைபடம். நிகழ்வெண் பரவலில் வரைகலையை இது முன்னிலைப்படுத்துகிறது. 'X' அச்சு என்பது வகுப்பு இடையீடால் குறிக்கப்படுகிறது. 'Y' அச்சு என்பது நிகழ்வெண்களால் குறிக்கப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பின் நிகழ்வெண் உயரத்திற்கேற்ப நிமிர்நிலை செவ்வகங்கள் வரையப்பட்டுள்ளன. இச்செவ்வகங்களுக்கு இடையிடையே எவ்வித இடைவெளியும் இருப்பதில்லை.

(Length of leaves) இலைகளின் நீளங்கள்

இலைகள்	0-10	10-20	20-30	30-40	40-50	50-60	60-70	70-80	80-90	90-100
மாணவர்களின் எண்ணிக்கை	8	15	20	23	18	11	9	6	4	2

செவ்வகத்தின் அகலம் வகுப்பின் பரப்பெல்லைக்கு (Range) சமமாக இருக்கும் ஒவ்வொரு வகுப்பின் நிகழ்வெண்ணிற்கு சமமாக ஒவ்வொரு செவ்வகத்தின் உயரம் உள்ளது. ஹிஸ்டோக்ராம் என்பது இரு பரிமானம் கொண்ட வரைபடம். ஏனெனில் ஒவ்வொரு செவ்வகத்தின் உயரமும் அகலமும் தரவு அளவுக்கு ஏற்ப உள்ளன. ஹிஸ்டோக்ராம் என்பது Bar வரைபடத்திலிருந்து வேறுபட்டது. Bar வரைபடம் என்பது ஒரு பரிமானம் கொண்டதாகவே இருப்பது. Bar வரைபடத்தில் தரவுக்கேற்ப உயரம் மட்டும் குறிக்கப்படும். ஆனால், தரவுக்கேற்ப அகலம் குறிக்கப்படுவதில்லை.

ஹிஸ்டோக்ராம் பயன்பாடுகள்

முழுமைப்பாடான தரவுகளைப் பற்றிய தெளிவான செய்தியைத் இது தருகிறது. சிக்கலான தரவுகளை எளிய காட்சியில் விளக்கிக் காட்டுகிறது. கவர்ச்சியும் மனதில் பதியத்தக்கதாகவும் உள்ளது. இடைநிலை மற்றும் முகடுகளைக் கண்டறிய முடிகிறது. நிகழ்வெண் பரவலை ஒப்பிட்டறிய வசதியாக உள்ளது. இனத்தொகையில் உள்ள மாறியல்களின் பரவல் பாணியின் கருத்துருவத்தை இது குறிக்கிறது.

ஹிஸ்டோக்ராம் மற்றும் Bar chartக்கு இடையே காணும் வேறுபாடுகள்

எண்	ஹிஸ்டோக்ராம்	பார் சார்ட்
1.	ஹிஸ்டோக்ராம் என்பது ஒரு வரைகலை	பார்சார்ட் என்பது ஒரு வரைபடம்
2.	இது இரு பரிமாணம் காட்டுகிறது	இது ஒரு பரிமாணத்தைக் காட்டுகிறது
3.	ஒவ்வொரு செவ்வகங்களின் உயரம், அகலம் தரவுக்கேற்ப உள்ளன	தரவுக்கேற்ப உயரம் மட்டும் உள்ளது
4.	ஹிஸ்டோக்ராமில் செவ்வகங்களின் மொத்தப் பரப்பளவும் நிகழ்வெண்களைக் குறிக்கிறது.	பார் சார்ட்டில் உயரம் மட்டும் நிகழ்வெண்ணைக் குறிக்கிறது.
5.	எவ்வித இடைவெளியும் இன்றி பக்கம்பக்கமாக செவ்வகங்கள் வரையப்படுகின்றன	இடைவெளிகளுடன் செவ்வகங்கள் வரையப்படுகின்றன.
6.	தொகுதித் தொடர் நிகழ்வெண் பரவலுக்கு ஹிஸ்டோக்ராம் பயன்படுகிறது.	பிரிநிலை நிகழ்வெண் பரவலை குறிப்பிடுவதற்கு பார்சார்ட் பயன்படுகிறது.

மாணவர்களின் மதிப்பெண்கள்

மதிப்பெண்கள்	0-10	10-20	20-30	30-40	40-50	50-60	60-70
மாணவர்களின் எண்ணிக்கை	3	9	12	16	14	10	5



X அச்சு = மதிப்பெண்கள்
1 செ.மீ =10 மதிப்பெண்கள்
Y அச்சு= மாணவர்களின் எண்ணிக்கை
1 செ.மீ = 2 மாணவர்கள்

பை வரைபடம் (Pie diagram)

பை (அச்சுருள்படிவ) (pie) வரைபடத்தில் வட்டமான உருவமைப்பில் தரவுகள் காட்டப்படுகின்றன. எனவே இதனை வட்ட வரைபடம் எனவும் அழைப்பர். வட்ட வடிவத்தின் மொத்தப் பரப்பு 360° ஆகும். எனவே, இத்தரவுகள் பாகையாகப் (degree) பிரிக்கப்பட்டுள்ளன. வட்டத்திற்கேற்ப இதில் பிரிவினை செய்யப்படுகிறது. ஒவ்வொரு தரவும் ஒரு கோணமாக (angle)/பாகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை கோண வரைபடம் எனவும் அழைக்கலாம். இவ்வட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரிவினையும் வெவ்வேறு வண்ணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, இது ஒரு பரப்பளவு வரைபடம் என்று கூட கூறலாம். இது ஒரு இரு முப்பரிமாண வரைபடம் ஆகும். மொத்த அளவை பெறுவதற்கு மதிப்பளவுகள் கூட்டப்படுகின்றன. பின்பு, ஒவ்வொரு மதிப்பும் பாகையாக மாற்றப்படுகிறது.

40 மாணவர்களின் இரத்த தொகுதி

ùRd¡ §	UôQ YoLs
A	3
B	18
AB	8
O	11
ùUôj Rm	40



பை வரைபடம் (Pie diagram)

40 மாணவர்களின் இரத்தத் தொகுதி பாகைகளில் கொடுக்கப்பட்டுள்ளது

ùRd¡ §	UôQ YoLs	Tôû LLs
A	3	3/40 X 360=27
B	18	18/40 X 360=162
AB	8	8/40 X 360=72
O	11	11/40 X 360=99
ùUôj Rm	40	360 °

மொத்த அளவில் ஒவ்வொரு மதிப்பையும் வகுத்து அதனை 360ல் பெருக்குவதன் மூலம் சாத்தியமாகிறது. வட்டமாக ஒரு வரைபடம் வரையப்படுகிறது. ஒவ்வொரு மதிப்பிற்கான பாகை ஒரு நீட்டலளவை உதவியுடன் அளவிடப்படுகிறது. பொதுவாக, அதிகபட்ச பாகை அளவுடன் இம்மதிப்பு, வட்டத்தின் 12 மணி என்ற அமைவில் குறியிடப்படுகிறது. பிற மதிப்புகள் இடமிருந்து வலமாக போக்கில், இறங்குவாக்கில் குறியிடப்படுகின்றன.

நிகழ்வெண் பலகோணம் (Frequency Polygon)

நிகழ்வெண் பரவலை வரைகலையில் வெளிப்படுத்துவதே நிகழ்வெண் பலகோணம் எனப்படும். இதன் பொருள் ஒரு வளைவு என்பது ஒரு நிகழ்வெண் பரவலைக் குறித்துக் காட்டுகிறது. ஹிஸ்டோக்ராம் வரைபடத்தில் ஒவ்வொரு செவ்வகத்தின் மைய இலக்கு (Midpoint) தேர்வுக் கோட்டினால் இணைக்கும் பொழுது நிகழ்வெண் பலகோணம் கிடைக்கிறது. அனுமானத்துடன் வரையப்படும் இந்நேர்வு கோடுகள் வகுப்பு இடையீடின் மைய இலக்குகளில் ஒருமுகப்படுகின்றன. பலகோணத்தின் பரப்பளவு ஹிஸ்டோக்ராமின் பரப்பளவுக்கு சமமாக உள்ளது. ஏனெனில், விடுபட்ட பரப்பு (area) அதில் சேர்க்கப்பட்ட பரப்பிற்கு சமமாக இருக்கிறது.

வினா

கீழ்க்கண்ட தரவுகளுக்கான ஒரு நிகழ்வெண் பலகோணத்தை வரைக.

மாணவர்களின் மதிப்பெண்கள்

மதிப்பெண்கள்	0-10	10-20	20-30	30-40	40-50	50-60	60-70
மாணவர்களின் எண்ணிக்கை	6	10	13	15	10	7	5

X அச்சில் மதிப்பெண்கள் குறிக்கப்படுகின்றன.

1 செ.மீ = 10 மதிப்பெண்கள்

Y அச்சில் மாணவர்களின் எண்ணிக்கை குறிக்கப்படுகிறது.

1 செ.மீ = 2 மாணவர்கள்



மாணவர்களின் மதிப்பெண்களைக் காட்டும் நிகழ்வெண் பலகோணத்துடன் கூடிய ஹிஸ்டோக்ராம்



X அச்சு = மதிப்பெண்கள் 1 செ.மீ = 10 மதிப்பெண்கள்
Y அச்சு = மாணவர்களின் எண்ணிக்கை 1 செ.மீ = 2 மாணவர்கள்

ஒவ்வொரு வகுப்பின் நிகழ்வெண்ணின் உயர அளவிற்கு நேர்வான செவ்வகங்கள் வரையப்படுகின்றன. இச்செவ்வெகங்கள் ஒன்றுக்கொன்று இடைவெளியின்றி வரையப்படுகின்றன. ஒவ்வொரு செவ்வகத்தின் அகலம் வகுப்பின் எல்லைக்குச் சமமாக உள்ளது. ஒவ்வொரு செவ்வகத்தின் உயரம் ஒவ்வொரு வகுப்பின் நிகழ்வெண்ணிற்கு சமமாக உள்ளது.

மாணவர்களின் மதிப்பெண்கள்

மதிப்பெண்கள்	0-10	10-20	20-30	30-40	40-50	50-60	60-70	70-80
மாணவர்களின் எண்ணிக்கை	8	15	20	23	17	8	5	3